★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

EELANADU

மலர் 21 கார்த்திகை 4 ஜுலிஹஜ் 29 இதழ் 281
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 20.11.79

UNIVERSITY ... RECEIVED 1979 ... PERIODICALS DIVISION LIBRARY

## ஐ. தே. க: தஹா தெரிவு!

(கொழும்பு)

**காலி இடைத்தேர்தலில், ஐக்கியதேசிய கட்சியின் அபேட்சகராக, டாக்டர் டபிள்யு. தகநாயக்கா தெரிவு செய்யபபட்டுள்ளார்.**

1977ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் காலித் தொகுதியில், டாக்டர் தஹநாயக்கா தோற்கடிக்கப்பட்டு, ஐக்கியதேசிய கட்சி அபேட்சகர் திரு ஆல்பேர்ட் சில்வா தெரிவுசெய்யப்பட்டதும், பின்னர், டாக்டர் தஹநாயக்காவின் தேர்தல் ஆட்சேப மனு மீது, திரு ஆல்பேர்ட் சில்வாவின் தெரிவு நிராகரிக்கப்பட்டு, இடைத்தேர்தல் நடைபெறவேண்டும் என்று தேர்தல் ஆட்சேபமனு மீது தீர்ப்பளிக்கப்பட்டதும் வாசகர்கள் தெரிந்ததே.

நேற்று ஸ்ரீ கோதாவில் கூடிய ஐக்கியதேசியக் கட்சியின் நியமனச்சபை, நீண்ட ஆலோசனையின் பின்னர் [6-ம் பக்கம் பார்க்க]

# "வேலை வாய்ப்பு: தமிழர் புறக்கணிப்பு; நாடு அடகு வைக்கப்பட்டது"

## 'பட்ஜட்' விவாதத்தில் எதிர்க்கட்சிகள் கண்டனம்'

(கொழும்பு)

"கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் 2 லட்சத்து 80 ஆயிரம் பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளதாக வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது இத்தொகையில் ஐந்து வீதமாவது தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே சகல நியமனங்களையும் பாரபட்சமின்றி சகலருக்கும் வழங்குங்கள்"

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் நேற்று பாராளுமன்றத்தில் பட்ஜட் விவாதத்தை எதிர்க்கட்சியின் சார்பில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். டி. பண்டார நாயக்கா (கம்பஹா எம். பி.) உரையாற்றுகையில், வரவு-செலவுத் திட்டம் முழுக்க முழுக்க வெளிநாட்டு உதவிகளையே நம்பியுள்ளது என்றும், உத்தேச அபிவிருத்தித் திட்டங்களுக்காக முழு நாடுமே அடகு வைக்கப்பட்டுள்ளது என்றும் கண்டனம் தெரிவித்தார்.

திரு எம். சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இந்த வரவு-செலவுத் திட்டத்தினால் நடுத்தர-குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு எதுவித நன்மையும் கிடையாது.

"இதில் அபிவிருத்திக்கே முக்கிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பதானால் சிறந்த முறையில் திட்டமிடப்படவேண்டும்.

"உத்தேச அபிவிருத்தித் திட்டங்களில் 65 வீதம் வெளிநாட்டு உதவிகளிலும் கடன்களிலுமே தங்கியுள்ளது இதனால் அபிவிருத்தி இடம்பெறுமா என்பது சந்தேகமாக உள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களில் பெரும்பாலானவை தனியார் துறையினரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனியார் துறையின் வரலாற்றை அவதானித்து வந்த எவரும் இவ்வளவு பொறுப்பை தனியார் துறையினரிடம் ஒப்படைப்பது சரியென ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

"இந்நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கெல்லாம் எண்ணெய் விலை அதிகரிப்பே காரணம் என்று கூறிவிட முடியாது. கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் அதிகரித்தமையே எமது நாட்டின் வாழ்க்கைச்செலவு அதிகரித்தமைக்குக் காரணமாகும்.

இன்றைய அரசு பதவிக்கு வந்தபின்னர் இரண்டு தடவை சம்பள அதிகரிப்பு வழங்கியுள்ளபோதிலும் அதிகரித்து வரும் வாழ்க்கைச்செலவைச் சமாளிக்க இது போதுமானதாக இல்லை" (ம)

★ ஈரான்-அமெரிக்க நெருக்கடி

## விசாரணை நடைபெறும்

### அயத்தொல்லா அறிவிப்பு

(தெஹ்ரான்)

விடுவிக்கப்பட்ட பதின்மூன்று பணயக்கைதிகள் தவிர்ந்த ஏனைய பணயக்கைதிகள் மீது, உளவு குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடைபெறும் என்று அயத்தொல்லா கொமெய்னி நேற்று அறிவித்தார்.

ஷாவை அமெரிக்கா வெளியேற்றும் வரை பணயக்கைதிகள் எவரும் இனிமேல் விடுவிக்கப்படமாட்டார்கள் என்று ஈரானிய மதத்தலைவர் நேற்று திட்டவட்டமாக அறிவித்தார்.

பதின்மூன்று பணயக் கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அயத்தொல்லா கொமெய்னி மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

13 பணயக் கைதிகளும் இரண்டு பிரிவுகளாக நேற்றுக் காலையும், பிற்பகலும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதற்கிடையே பணயக் கைதிகள் மீதான விசாரணையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மாணவர்கள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

### கிரிக்கெட் டெஸ்ட்

(பங்களூர்)

இந்திய — பாகிஸ்தான் முதலாவது கிரிக்கட் டெஸ்ட், நாளை புதன்கிழமை பங்களூரில் ஆரம்பமாகும்.

## இ. காங். தி. மு. க. தொகுதி உடன்பாடு! நாளை விபரம் வெளியாகும்

(சென்னை)

"லோகசபை தேர்தல் சம்பந்தமாக இந்திரா காங்கிரசுக்கும் தி. மு. கழகத்துக்குமிடையே முழு அளவில் தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளது" என்று தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி நேற்று இங்கு அறிவித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த 39 லோகசபைத் தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் 25 தொகுதிகளிலும் தி. மு. கழகம் 17 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் திரு மு. கருணாநிதி, நேற்று தொகுதி உடன்பாடு பற்றிப் பேசுகையில், இரு கட்சிகளுக்குமிடையே தொகுதி உடன்பாடு எந்தவிதப் பிரச்சினையுமின்றி ஏற்பட்டுவிட்டது என்றும் 3 தொகுதிகளில் கருத்துவேறுபாடு நிலவியபோதிலும் அதுவும் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது என்றும், தொகுதி விபரங்கள் இரண்டு தினங்களில் [6-ம் பக்கம் பார்க்க]

## சகல மாவட்டங்களிலும் ஆசிரிய பயிற்சி கலாசாலை

(கொழும்பு)

ஆசிரிய பயிற்சி கலாசாலைகளை சகல மாவட்டங்களிலும் நிறுவுவது என்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மாவட்டங்கள் தோறும் புதிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் நிறுவப்படவுள்ளன.

முதலில் கல்வி ஆதார நிலையங்கள் நிறுவப்பட்டு பின்னர் அவை பயிற்சி கலாசாலைகளாகத் தரமுயர்த்தப்படும்.

ஆரம்பத்தில் இக்கல்வி ஆதார நிலையங்கள் அம்பாறை, பொலன்னறுவை, நுவரேலியா ஆகிய மாவட்டங்களிலும் பின்னர் திருமலை, வவுனியா, புத்தளம், தங்காலை, மாத்தளை, குளியாப்பிட்டி ஆகிய மாவட்டங்களிலும் நிறுவப்படும். (இ)

## ஆயிரம் சுருட்டுக்கு ரூ. 50 வேதனம்; சம்பள நிர்ணயசபை அங்கீகாரம்!

(யாழ்ப்பாணம்)

சுருட்டுத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் சுருட்டுகளுக்கு ஐம்பது ரூபா அலவன்ஸ் வழங்கப்படவேண்டும் என்று கொண்டுவரப்பட்ட தீர்மானம், நேற்று நடைபெற்ற சுருட்டுத்தொழில் சம்பள நிர்ணயசபைக்கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டது.

சுருட்டுத்தொழில் சம்பள நிர்ணயசபைக்கூட்டம், நேற்றும் பிற்பகல் தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. ஜி. வீரக்கோன் தலைமையில் யாழ் மாவட்ட தொழிற் கந்தோரில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தலைவர் திரு சி. [illegible] முதலியார், சுருட்டுத்தொழிலாளர்கள் அனுபவிக்கும் பல்வேறு கஷ்டங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தெளிவாகக் கூறி; "ஆயிரம் சுருட்டுகளைச் சுற்றும் சகல சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் ஐம்பது ரூபா அலவன்ஸ் வழங்கப்படவேண்டும்" என்று கோரும் பிரேரணையை தாக்கல்செய்தார். இப் பிரேரணை (6-ம் பக்கம் பார்க்க)

உடன் தேவை

சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் (ஆண்/பெண்) உடன் தேவை. விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி,
யாழ். தனியார் வைத்தியசாலைகள்,
395, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(4135)

